DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 89/2024 Crime No. 210/2024 Station Bhavani

| Name | PW1- வசந்தா | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.02.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு அங்கன்வாடியில் சத்துணவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள். கடந்த 10.04.2024ம் தேதியன்று காலை சுமார் 11.00 மணியளவில் எனக்கு தெரிந்த ஒருவர் எனக்கு போன் செய்து எதிரிகள் மூவரும் எங்களது கரும்புக்காட்டில் உள்ள கரும்பை வெட்டிக்கொண்டிருப்பதாக கூறினார். நான் உடனடியாக அங்கு சென்று எனது காட்டில் உள்ள கரும்பை ஏன் வெட்டுகிறிர்கள் என்று கேட்டேன். அதற்கு எதிரி முருகன் அவரது கையால் எனது கழுத்தில் அடித்துவிட்டார். எதிரி அஜீத்குமார் எனது கன்னத்தில் அடித்துவிட்டார். எதிரி நாகம்மாள் என்னை பிடித்து கீழே தள்ளி விட்டார். பிறகு நான் வலி தாங்கமுடியாமல் பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுவிட்டேன். அங்கு வந்த போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். **தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமுலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 89/2024 Crime No. 210/2024 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW2- அர்த்தனாரி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.02.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு டிரைவராக உள்ளேன். அ.சா.1 வசந்தா எனது பக்கத்து வீட்டுக்காரர். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள். தேதி மாதம் நினைவு இல்லை. கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை சுமார் 11.00 மணியளவில் எனது காட்டு வழியாக இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது எதிரி முருகன் அ.சா.1 வசந்தாவை அடித்து கொண்டிருந்தார். முருகனின் மகனும் அ.சா.1 -யை அடித்து கொண்டிருந்தார். முருகனின் மனைவி அ.சா.1 -யை எட்டி உதைத்து கொண்டிருந்தார். மேற்படி சம்பவங்களை நான் நேரடியாக பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 89/2024 Crime No. 210/2024 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW3- முருகன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.02.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு டீக்கடை வைத்துள்ளேன். அ.சா.1 வசந்தா எனது ஊர்க்காரர். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். அவர்கள் அ.சா.1-ன் பக்கத்து காட்டுக்காரர்கள். கடந்த 10.04.2024 தேதியன்று காலை சுமார் 11.00 மணியளவில் நான் ரோடு வேலை செய்பவர்களுக்கு டீ கொண்டு சென்றேன். அப்போது அ.சா.1-ன் காட்டில் எதிரிகள் முருகன், நாகம்மாள், அஜீத்குமார் ஆகிய மூவரும் வசந்தாவை தகாத வார்த்தைகளால் பேசி அடித்துக்கொண்டிருந்தார்கள். மேற்படி சம்பவத்தை பார்த்த நான் போலிசாருக்கு தகவல் தெரிவித்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 89/2024 Crime No. 210/2024 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW4-கணேசன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.02.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 11.04.2024 தேதியன்று மதியம் 3.00 மணியளவில் வசந்தாவின் காட்டுக்கு முன்தினம் நடைபெற்ற தகராறு தொடர்பாக விசாரிக்க சென்ற போது அங்கு வந்த போலிசார் முன்தினம் நடைபெற்ற தகராறு தொடர்பாக போலிசார் தகராறு நடைபெற்ற இடத்திற்கு வந்த போலிசார் சம்பவ இடத்தை விசாரித்து பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார். பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். **தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1-வது கையொப்பம் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**